DECEMBER 2023 **P/ID 35321/PTL3L**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. புறத்திணை ஏழு யாவை?

2. தமிழர் சால்பு என்னும் நூலைப் பற்றி நீர் அறிவன யாவை?

3. பெருந்திணை எதற்குப் புறம்?

4. அகநானூற்றில் பாலைப் பாடல்கள் எத்தனை?

5. நிரை – பொருள் சுட்டுக.

6. ஆவியின் மலை எது?

7. வேய் மருள் பணைத் தோள் – பொருளுரைக்க.

8. முடிவேந்தர் மூவர் யாவர்?

9. பூவை நிலைத் துறையின் கருத்து என்ன?

10. நுதல் – பொருள் சுட்டுக.

11. குறுந்தொகையில் உள்ள கபிலர் பாடல்கள் எத்தனை?

12. கலித்தொகை எத்தனை புலவோரால் பாடப்பட்டது?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. தொல்காப்பியம் சுட்டும் அகத்திணைகள் எவை?

14. அகநானூற்றால் அறியலாகின்ற வரலாற்றுக் குறிப்புகளை எழுதுக.

15. அகப் பாக்களை இளையோர் இலக்கியம் என்று அழைக்கலாமா?

16. சென்னியைப் பசுங்குடையார் பாராட்டுமாற்றைப் பகர்க.

17. புரைய மன்ற புரையோர் கேண்மை என்று நற்றிணைத் தலைவி பெருமைப்படுவதை விளக்குக.

18. தூக்கம் வரவில்லை என்று குறுந்தொகைத் தலைவி வருந்துவது ஏன்?

19. அயல் தூற்றும் அம்பலுக்கு நாணுவம் என்று நற்றிணைத் தோழி கூறுவது யாது?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. திணை இலக்கியங்களின் பண்புகள் யாவை? விளக்குக.

21. சங்க இலக்கிம் பழந்தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழுமாற்றைத் தெளிவுறுத்துக.

22. அகப் பாக்கள் உளவியல் பாங்கினவா? ஆராய்க.

23. ஐம்பெரும்பூதத்து இயற்கை என்று முடிநாகராயர் இயம்புமாற்றை விளக்குக.

24. சங்கப் பாக்கள் தொகுக்கப்பட்ட வரலாற்றை எடுத்துரைக்க.

———————